## இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியம் - 2017

-------------------------------------------------------------------------------------------------

இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கலைப்புக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கலைப்புக் கணக்கு 1953 இன் 36 ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதிய அதிகாரச்சட்டத்தின் (437 ஆவது அதிகாரம்) 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்ட சந்தர்ப்பங்களின் போது கலைப்பதற்கு இரண்டு குழுக்கள் இஇறப்பர் கட்டுப்பாட்டு பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கலப்பு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் 2016 மார்ச் 17 ஆந் திகதிய அமப/16/0373/726/006 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நிதியத்தை கலைப்பதற்கு அங்கீகாரம் கிடைத்து திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் 03 மாத காலப்பகுதிக்காக கலைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 தற்போயை கலைப்பாளரை நியமித்தல்

2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய அமப/17/1879/726/044 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 04 மாதங்களில் இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியம் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் கலைப்புக் கணக்கை தயாரிப்பதற்காக ரூபா 625,000 தொகை திரட்டு நிதியத்திலிருந்து செலவிடுவதற்கும் கலைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் கலைப்பாளரை நியமிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி கலைப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். கலைப்பாளரால் கலைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை 2018 மார்ச் 05 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் கலைப்புக் கணக்குகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேவையான சில புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைககளில் ஒரு பகுதி இல்லையென குறிப்பிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது அது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

நிதியம் இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடயங்கள் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் | |
|---|---|---|
| | வரவு<br>ரூபா | செலவு<br>ரூபா |
| நடைமுறைச் சொத்துக்கள் | 6,462,290 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 178,438,206 | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 20,090,250 |
| திரட்டிய மிகை | | 164,810,246 |
| மொத்தம் | 184,900,496 | 184,900,496 |

### 3.2 நிதி விளைவுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளுக்கு கலைப்பாளரால் சீராக்கம் செய்யப்பட்டு தேறிய பெறுமதி கலைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டதன் பின்னர் அக்கணக்கிலான ரூபா 1,343,917 ஆன வரவு மீதி இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் ரூபா 130,497,592 ஆன செலவு மீதி திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டதன் பின்னர் இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியம் தீர்வு செய்யப்பட்டிருந்தது.